# ஒன்றிய பா.ஜ.க. அரசின் சென்சஸ் – தொகுதி மறுவரையறை வஞ்சகம் நிறைந்தது!

## அ.தி.மு.க. போன்ற அடிமைத் துரோகிகள் தங்களின் சுயநலத்துக்காக பா.ஜ.க. முன் மண்டியிட்டாலும்;

# தி.மு.க.வின் தலைமையில் ஓரணியில் தமிழ்நாடு அணி வகுக்கும்! தமிழ்நாடு வெல்லும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவில் சூளுரை!

**சென்னை, ஜூன் 7–**

**ஒன்றிய பா.ஜ.க. அரசின் சென்சஸ் – தொகுதி மறுவரையறை வஞ்சகம் நிறைந்தது என்றும், அ.தி.மு.க. போன்ற அடிமைத் துரோகிகள் தங்களின் சுயநலத்துக்காக பா.ஜ.க. முன் மண்டியிட்டாலும் தி.மு.க.வின் தலைமையில் ஓரணியில் தமிழ்நாடு அணிவகுக்கும்! தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்! என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் சூளுரைத்துள்ளார்.**

இது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவு வருமாறு:-

- மக்கள்தொகைக் கணக்கெடுப்பில் நிகழும் தாமதமும், அதைத் தொடர்ந்து நடைபெற இருக்கும் தொகுதி மறுவரையறையும் தற்செயலானவை அல்ல. நான் தொடக்கம் முதலே எச்சரித்து வரும் ஆபத்து நம் வாசற்படி வரை வந்தேவிட்டது.
- ஒன்றிய பா.ஜ.க. அரசு சென்சஸ் மற்றும் தொகுதி மறுவரையறையைச் செயல்படுத்தவுள்ள போக்கு வஞ்சகம் நிறைந்தது. மக்கள்தொகைக் கட்டுப்பாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி வளர்ச்சியடைந்த தென்மாநிலங்கள் தண்டிக்கப்பட இருக்கின்றன.
- அதேவேளையில், மக்கள் தொகைக் கட்டுப்பாட்டைப் பல பத்தாண்டுகளாகக் காற்றில்



பறக்கவிட்ட மாநிலங்களோ நாடாளுமன்றத்தில் கூடுதல் இடங்களைப் பெற இருக்கின்றன. அநீதியான இந்த நடவடிக்கை கூட்டாட்சியின் சமநிலையைக் குலைத்து, பொறுப்பற்ற தன்மைக்கு வெகுமதி அளிக்கிறது.

**ப.சிதம்பரம் விளக்கமாக கூறியுள்ளார்!**

- இந்தச் சதித் திட்டம் குறித்து நான் முன்பே எச்சரித்திருந்தேன். தற்போது, ஒன்றிய முன்னாள் அமைச்சர் ப.சிதம்பரம் அவர்களும், பா.ஜ.க. எப்படி இந்தக் கைவரிசையைக் காட்டப் போகிறது என்பதை விளக்கமாக எடுத்துக் கூறியுள்ளார். நாம் விழிப்போடு இருப்பது மட்டுமல்ல, தென்னகத்தின் குரலைக் காப்பாற்றிக் கொள்வதற்கான வியூகங்களையும் தீட்டவேண்டிய வேண்டிய தருணம் இது.
- 1971ஆம் ஆண்டு சென்சஸ் தரவுகள் போய், 2027 மக்கள்தொகைக் கணக்கெடுப்பு தரவுகள் தான், அதற்கடுத்து உடனே நிகழும் தொகுதி மறுவரையறைக்கு, அடிப்படையாக அமையும். தென் மாநிலங்களின் பிரதிநிதித்துவத்தைக் குறைத்து, தனக்குச் சாதகமான முறையில் நாடாளுமன்ற இடங்களை பா.ஜ.க. நிர்ணயித்துக் கொள்ளத்தான் இது வழி ஏற்படுத்தும்.
- தொகுதி மறுவரையறையால் பாதிக்கப்படும் மாநிலங்களின் கவலைகள் கருத்தில் கொள்ளப்படும் என ஒன்றிய உள்துறை அமைச்சகம் சொல்கிறது. ஆனால் இவை தெளிவற்ற மழுப்பல் பதில்கள். இவர்கள் சொல்வதைத் தண்ணீரில்தான் எழுதிவைக்க வேண்டும். நாம் கேட்பதெல்லாம் நாடாளுமன்றத்தில் உறுதி அளியுங்கள், உரிய அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தை நிறைவேற்றுங்கள் என்பதே!

**ஜம்மு காஷ்மீரில் பா.ஜ.க. வாக்குறுதி என்ன ஆச்சு!**

- பிரிவு 370ஐ நீக்கிய பிறகு என்ன நடந்தது என்று பார்த்தாலே இவர்களது பேச்சின் இலட்சணம் புரிந்துவிடும். ஜம்மு காஷ்மீருக்கு மீண்டும் மாநில அந்தஸ்து வழங்கப்படும் என ஒன்றிய அரசு சொன்னது. தேர்தலும் நடைபெற்றது. உச்சநீதிமன்றத்திலேயே உறுதியளிக்கப்பட்டது. ஆனாலும், ஜம்மு காஷ்மீர் இன்னும் யூனியன் பிரதேசமாகத்தான் இருக்கிறது. இப்படிப்பட்ட சத்தியவான்களோடு தான் நாம் போராடிக் கொண்டிருக்கிறோம்.
- 2027 சென்சஸ் அடிப்படையில் தொகுதி மறுவரையறையை ஒன்றிய அரசு மேற்கொண்டால், தென்னகத்தின் ஜனநாயக வலிமை மதிப்பில்லாத அளவுக்குக் குறைந்துவிடும்.
- அ.தி.மு.க. போன்ற அடிமைத் துரோகிகள் தங்களின் சுயநலத்துக்காக பா.ஜ.க. முன் மண்டியிட்டாலும், தி.மு.க.வின் தலைமையில் ஓரணியில் தமிழ்நாடு அணிவகுக்கும்! நம் மாநிலம் வளர்ச்சியடைந்துள்ள ஒரே காரணத்துக்காகத் தண்டிக்கப்படுவதை ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்! தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்!

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

---

## எடப்பாடி பழனிச்சாமி தன்னையே விற்று விட்டார்!

# தமிழ்நாட்டு மக்கள் பழனிச்சாமியின் துரோகத்தை ஒருபோதும் மன்னிக்க மாட்டார்கள்!

### கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி கடும் கண்டனம்!

சென்னை, ஜூன்.7-

“நீங்கள் உங்களையே விற்றுவிட்டீர்கள் நாங்கள் அப்படி அல்ல! என்று கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி தமது வலைதளத்தில் எடப்பாடி பழனிச்சாமிக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து கனிமொழி கருணாநிதி எம்.பி.யின் வலைதளப் பதிவு வருமாறு :

தமிழக மக்கள் உங்கள் துரோகத்தை ஒருபோதும் மன்னிக்க மாட்டார்கள்.



தங்கள் சொந்த மாநில நலன்களை கைவிட்டு, தனிப்பட்ட அரசியல் பிழைப்புக்காக டெல்லி எஜமானர்களுக்கு பணிந்து நடப்பவர்கள் எங்களுக்குப் போதித்திட எந்த உரிமையும் இல்லை.

தமிழ்நாட்டின் எதிர்காலத்துடன் விளையாடுபவர்களை - நமது விவசாயிகள், பெண்கள், இளைஞர்கள் மற்றும் குழந்தைகளின் நலன்களை அழிப்பவர்களை நீங்கள் பாதுகாக்கிறீர்கள்.

அச்சுறுத்தல் நம்முடைய வீட்டு வாசலில் நிற்கிறது. உங்கள் டெல்லி எஜமானர்களின் பொய்கள் தமிழ்நாட்டில் எடுபடாது என்று அவர்களிடம் சொல்லுங்கள். எழுதப்பட்ட, தெளிவாக வரையறுக்கப்பட்ட அரசியலமைப்பு சட்டத்தின் தீர்வைத் தவிர வேறு எதையும் நாங்கள் விரும்பவில்லை.

அரசியலமைப்புச் சட்ட உத்தரவாதங்கள் கிடைக்கும் வரை நாங்கள் அமைதியாக இருக்க மாட்டோம். உரத்த குரல் எழுப்புவோம்.

நீங்கள் உங்களையே விற்றுவிட்டீர்கள். நாங்கள் அப்படி அல்ல!

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

---

## திருச்சியில் ரூ.290 கோடியில் உலகத்தரத்துடன் கூடிய மாபெரும் நூலகத்திற்கு

# பெருந்தலைவர் காமராஜர் பெயர் சூட்டிய முதல்வருக்குப் பாராட்டுகள் நன்றி!

### காங்கிரஸ் கமிட்டி தலைவர் கு.செல்வப்பெருந்தகை அறிக்கை!

*சென்னை, ஜூன்.7-*

*இது குறித்து கு.செல்வபெருந்தகை விடுத்துள்ள அறிக்கை வருமாறு:*

*தமிழகத்தில் பொற்கால ஆட்சி நடத்தி, இலவச கல்வி வழங்கிய பெருந்தலைவர் காமராஜரின் பெயரில் திருச்சியில் ரூபாய் 290 கோடி மதிப்பீட்டில் உலகத் தரத்துடன் அமைக்கப்படவுள்ள மாபெரும் நூலகத்திற்கு காமராஜர் பெயர் சூட்டிய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை பாராட்டுகிறேன். தமிழ்நாடு காங்கிரஸ் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*தமிழகத்தில் மூவாயிரம் கோயில்களுக்கு கடந்த 4 ஆண்டுகளில் குடமுழுக்கு செய்து சாதனை படைத்து ஆன்மீகப் புரட்சி செய்திருக்கிற தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களையும், அதனை செயல்படுத்திய இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு அவர்களையும் மனதார பாராட்டுகிறேன்.*

*தமிழகத்தில் மதநல்லிணக்கத்தை போற்றுகிற வகையில், மதச்சார்பற்ற அரசாக செயல்படுவதை இந்நிகழ்வு மேலும் உறுதிபடுத்துகிறது. இதன்மூலம் விஷம பிரச்சாரம் செய்து வருகிற ஆர்.எஸ்.எஸ்., சங்பரிவாரங்களுக்கு மிகப் பெரிய அளவில் பதிலடி கொடுக்கின்ற வகையில் தமிழ்நாடு அரசு செயல்பட்டு வருவது மிகுந்த*



*மகிழ்ச்சியைத் தருகிறது.*

*அதேபோல, ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியில் கொண்டு வரப்பட்ட மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டத்திற்கு உரிய நிதியை ஒதுக்காமல் ஒன்றிய பா.ஜ.க. அரசு புறக்கணித்ததற்காக ஏற்கனவே வன்மையான கண்டனத்தை வெளிப்படுத்தியிருந்தோம். இன்று தமிழகத்தில் 100 நாள் வேலை திட்டத்திற்கு ஒருநாள் ஊதியமான 319 ரூபாயை 336 ஆக உயர்த்தி அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில், இதனால் 88 லட்சத்து 16 ஆயிரத்து 448 பேர் பயனடைகின்றனர். கடந்த ஆண்டு 100 நாள் வேலை திட்டத்திற்கு ரூபாய் 2900 கோடி ஒதுக்கப்பட்டது. அதில் சம்பளத் தொகை போக, பொருட்கள் வாங்கியதற்காக வழங்க வேண்டிய ரூபாய் 1400 கோடியை ஒன்றிய பா.ஜ.க. அரசு நிலுவையில் வைத்துள்ளது. இதனை உடனடியாக விடுவிக்க வேண்டுமென தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.*

---

## சென்னை மாநகராட்சிப் பகுதிகளில்

# கட்டுமானம் - இடிபாடு கழிவுகள் - பாதுகாப்பான கட்டுமானம் குறித்த பயிற்சிகள்!

### மேயர் ஆர்.பிரியா தொடங்கி வைத்தார்!

செகன்னை, ஜூன்.7-

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் மேலாண்மை, சுத்தமான மற்றும் பாதுகாப்பான கட்டுமானம் குறித்த புதிய வழிகாட்டு நெறிமுறைகள் தொடர்பாக அலுவலர்களுக்கான பயிற்சியினை மேயர்

திருமதி ஆர்.பிரியா நேற்று (06.06.2025) ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் தொடங்கி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து, மேயர் உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு, நெகிழிப் பயன்பாட்டினைத் தவிர்த்தல் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலான கலைநிகழ்ச்சிகளை ரிப்பன் கட்டட வளாகம் முன்பகுதியில் தொடங்கி வைத்துப் பார்வையிட்டார்.

பின்னர், பொதுமக்களுக்கு நெகிழிப் பயன்பாட்டினைத் தவிர்த்தல்குறித்துவிழிப்புணர்வு ஏற்படுத்தும் கலைநிகழ்ச்சிகளுக்கான வாகனத்தினை கொடியசைத்துத் தொடங்கி வைத்து, மேலும், பொதுமக்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தும் துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டார்.

பின்னர் மேயர் செய்தியாளர்கள் சந்திப்பில் தெரிவித்ததாவது

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, பெருநகர சென்னை மாநகராட்சியில் பல்வேறு திட்டப்பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நேற்று உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு, தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து அரசு அலுவலகங்களிலும் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகத்தில் உள்ள அலுவலகங்களிலும் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

துணை முதலமைச்சர் அவர்கள் நேற்று ரிப்பன் கட்டடத்திற்கு வருகை தந்து இந்தப் பணிகளை ஆய்வு மேற்கொண்டு, காணொலிக் காட்சி வாயிலாக அனைத்து அரசு அலுவலகங்களிலும் மேற்கொள்ளப்பட்ட தூய்மைப் பணிகள் குறித்து சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் கேட்டறிந்தார்கள்.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் மக்கும் மக்காத குப்பைகளைப் பிரித்து வழங்குவது குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், மாநகராட்சிப் பகுதிகளில் கட்டடம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் அகற்றும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்காக சுத்தமான மற்றும் பாதுகாப்பான கட்டுமானம், கட்டடி மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் மேலாண்மை என்ற இரண்டு புதிய வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளது. இந்த வழிகாட்டு நெறிமுறைகள் 21.05.2025 மற்றும் 21.04.2025 அன்று நடைமுறைபடுத்தப்பட்டது. இந்த வழிகாட்டு நெறிமுறைகள் குறித்து மாநகராட்சி பொறியாளர்களுக்கு இன்று பயிற்சி வழங்கப்படுகிறது.

சுத்தமான மற்றும் பாதுகாப்பான கட்டுமானத்திற்கான வழிகாட்டுதல்கள் மூன்று வகைகளாக பிரிக்கப்பட்டுள்ளது. அதிக முக்கியத்துவம், நடுத்தர முக்கியத்துவம் மற்றும் குறைந்த முக்கியத்துவம்

ஒரு ஏக்கருக்குள் கட்டுமானம் மேற்கொள்ளும்போது, 6 மீட்டர் உயரத்திலும், அதற்கு மேல் என்றால், 10 மீட்டர் உயரத்தில் உலோகத்தால் தடுப்பு அமைக்க வேண்டும்.

கட்டட இடிபாடுகளால் தூசி பரவுவதை தடுக்க அடர்த்தியான துணி, தார்பாய் இரட்டை அடுக்கு பச்சை வலையால் மூட வேண்டும். தூசி பரவாமல் தண்ணீர் தெளிக்க வேண்டும்.

கட்டுமான இடிபாடுகளை மாநகராட்சி வழிகாட்டுதலின்படி, அதற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் கொட்ட வேண்டும். நடைபாதை, சாலையோரம் கொட்டக் கூடாது.

இடிபாடுகளை வாகனங்களில் கொண்டு செல்லும் போது, தார்பாயினால் மூடி கொண்டு செல்ல வேண்டும். வாகனங்களுக்கு மாசுக் கட்டுப்பாட்டு வாரிய சான்று அவசியம்.

கட்டுமானப் பணி இடங்களில் கண்காணிப்பு கேமரா பொருத்த வேண்டும.

கட்டடத்தின் உயரம் 18.5 மீட்டருக்கு மேல் இருந்தால், சென்சார் அடிப்படையில் காற்று மாசை கண்டறியும் கருவி பயன்படுத்த வேண்டும்.

கட்டட இடிபாட்டுப் பணிகள் முடிவுற்றவுடன் உடனுக்குடன் கட்டட இடிபாட்டுக் கழிவுகள் மேலாண்மை வழிக்காட்டுதலின்படி அகற்றிட வேண்டும்.

மாநகராட்சியின் சார்பில் வகுக்கப்பட்டுள்ள சுத்தமான மற்றும் பாதுகாப்பான வழிகாட்டுதல்களை மீறுபவர்கள் மீது அபராதம் விதிக்கப்படும்.

அதிக முக்கியத்துவம் வாய்ந்த வழிகாட்டுதல்களை மீறினால், 20 ஆயிரம் சதுர மீட்டர் பரப்பளவிற்கு கட்டட கட்டுபவர்களுக்கு ரூ.5 லட்சமும், 500 ச.மீட்டர் முதல் 20 ஆயிரம் ச.மீட்டர் பரப்பளவிற்கு கட்டட கட்டுபவர்களுக்கு ரூ.25 ஆயிரம் வரை அபராதமும், 300 ச.மீட்டர் முதல் 500 ச.மீட்டர் பரப்பளவிற்கு கட்டட கட்டுபவர்களுக்கு ரூ.10 ஆயிரம் அபராதமும் விதிக்கப்படும்.

நடுத்தர/குறைந்த முக்கியத்துவம் வாய்ந்த வழிகாட்டுதல்களை மீறினால், 20 ஆயிரம் சதுர மீட்டர் பரப்பளவிற்கு கட்டட கட்டுபவர்களுக்கு ரூ.1 லட்சமும், 500 ச.மீட்டர் முதல் 20 ஆயிரம் ச.மீட்டர் பரப்பளவிற்கு கட்டட கட்டுபவர்களுக்கு ரூ.10 ஆயிரம் வரை அபராதமும், 300 ச.மீட்டர் முதல் 500 ச.மீட்டர் பரப்பளவிற்கு கட்டட கட்டுபவர்களுக்கு ரூ.1000 அபராதமும் விதிக்கப்படும்.

இவ்வாறு அதிக/நடுத்தர/குறைந்த முக்கியத்துவம் வாய்ந்த வழிகாட்டுதல்களில் விதி மீறல்கள் ஏற்பட்டால், மீறல்களை சரிசெய்வதற்கான எச்சரிக்கை அறிவிப்பு வழங்கப்பட்டு அதை சரி செய்வதற்கு 15 நாட்கள் அவகாசம் அளிக்கப்படும். 15 நாட்களுக்கு பிறகும் சரிசெய்யாவிட்டால் மட்டுமே பரப்பளவிற்கு ஏற்றவாறு அபராதம் விதிக்கப்படும். அதன் பிறகு 7 நாட்கள் அவகாசம் அளிக்கப்பட்டு அதன் பிறகும் சரிசெய்யாவிட்டால் கட்டுமான நடவடிக்கைகள் நிறுத்த உத்தரவு பிறப்பிக்கப்படும்.

கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவு மேலாண்மை வழிகாட்டுதல்கள், ஒரு மெட்ரிக் டன் வரை கட்டட கழிவுகள் உருவாக்குபவர்கள் நம்ம சென்னை செயலி மற்றும் 1913 தெரிவித்தால் மாநகராட்சியே இலவசமாக அகற்றும்.

சிறிய அளவில் கழிவுகள் உருவாக்குபவர்கள் தங்கள் கழிவுகளை பெருநகர சென்னை மாநகராட்சியின் செயலாக்க மையத்திற்கு கொண்டு செல்லவும், அதற்கு ஒரு டன்னிற்கு ரூ.800/ செயலாக்க கட்டணம் செலுத்த வேண்டும்.

பெருமளவு கழிவுகள் உருவாக்குபவர்கள் கட்டட இடிபாட்டு கழிவுகளை முறையற்ற வகையில் மழைநீர் வடிகால், தெருக்கள், திறந்த வெளி மற்றும் பொது மக்கள் பயன்பாட்டுப் பகுதிகளில் கொட்டுபவர்களுக்கு ஒரு மெட்ரிக் டன்னிற்கு ரூ.5000/ம், சிறிய அளவில் கழிவுகள் உருவாக்குவோர் மற்றும் சேவை வழங்குநர்களுக்கு முறையற்ற வகையில் கழிவுகளை கொட்டினால் ஒரு மெட்ரிக் டன்னிற்கு ரூ.3000/ம் அபராதமாக விதிக்கப்படும்.

இந்நிகழ்ச்சியில், துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) வி. ஜெயசந்திர பானு ரெட்டி, துணை ஆணையாளர்கள் வி.சிவ கிருஷ்ணமூர்த்தி, (பணிகள்), எம்.பி. அமித், (தெற்கு வட்டாரம்), கட்டா ரவி தேஜா, (வடக்கு வட்டாரம்), மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் ந.இராமலிங்கம், நிலைக் குழுத் தலைவர் (பொதுசுகாதாரம்) டாக்டர் கோ.சாந்தகுமாரி, தலைமைப் பொறியாளர் (திடக்கழிவு மேலாண்மை) கே.விஜயகுமார், மேற்பார்வைப் பொறியாளர் (மழைநீர் வடிகால்) ஏ.எஸ். முருகன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---






காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் நடைபெற்ற திருப்போரூர் சட்டமன்ற தொகுதியில் அடங்கிய கழக நிர்வாகிகள் கலந்தாலோசனை கூட்டத்தில் மண்டல தேர்தல் பொறுப்பாளர் – கழக துணை பொதுச்செயலாளர் ஆ.இராசா சட்டமன்ற தேர்தலில் கழகத்தினர் மேற்கொள்ள வேண்டிய பணிகளை குறித்து ஆலோசனைகளை வழங்கினார். அருகில் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், ஒன்றிய – பேரூர் கழக செயலாளர்கள், தலைமை செயற்குழு – பொதுக்குழு உறுப்பினர்கள், கழக அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் – துணை அமைப்பாளர்கள் ஆகியோர் உள்ளனர்.



திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருமுல்லைவாயில் மாசிலாமணீஸ்வரர் திருக்கோயில் இந்து அறநிலைத்துறை சார்பில் தேர் திருவிழா நடைபெற்றது. இதில் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பொதுமக்களுடன் கலந்து கொண்டார். இந்நிகழ்ச்சியில் மாநகர மேயர் உதயகுமார், மாநகரப் பொறுப்பாளர் சன்பிரகாஷ், கோவில் செயல் அலுவலர் பிரபாகரன், அறங்காவலர் பொன்னம்பலம் பாபு, மாமன்ற உறுப்பினர்கள் துளசிங்கம் சக்திவேலன், ஜெயப்பிரியா சரவணன், விமல் உள்பட கழக நிர்வாகிகள் பொதுமக்கள் பக்தர்கள் பலர் கலந்து கொண்டனர்.